செங்கை உள்பட...
முதல் பக்க தொடர்ச்சி

மழை பெய்யும். அதன் தொடர்ச்சியாக வட தமிழக கடலோர தமிழகத்தில் அனேக இடங்களிலும், இதர தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும் இடி மின்னலுடன் கூடிய மழை 18ம் தேதியில் பெய்யும். சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், மாவட்டங்களிலும் கன மழை முதல் மிக கனமழையும் பெய்யும். ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, வேலூர், அரியலூர், மயிலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் கன மழை பெய்யும். 19ம் தேதியில் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யும் வாய்ப்புள்ளது. இதேநிலை 21ம் தேதி வரை நீடிக்கும்.

தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக் கடல் பகுதிகளில் இன்று சூறாவளிக்காற்று மணிக்கு 55 கிமீ வேகத்தில் வீசும்.

கோயிலை சூழ்ந்த வெள்ளம்

▶ செங்கல்பட்டு மாவட்டம், லத்தூர் ஒன்றியம் கிழக்கு கடற்கரை சாலையை ஒட்டியுள்ள பரமேஸ்வரி மங்கலம் கிராமத்தில் பாலாற்றின் மைய பகுதியில் உள்ள கைலாச நாதர் கோயிலை சூழ்ந்து மழை வெள்ளம் பாய்கிறது.

ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்தை இந்தியா உறுதியாக எதிர்க்கும்

முதல்வர் மு.க.ஸ்டாலின் டிவிட்

சென்னை, டிச.17: ‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ திட்டத்தை இந்தியா உறுதியாக எதிர்க்கும் என்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தனது டிவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:

இந்தியாவின் பன்முகத்தன்மையையும் ஜனநாயகத்தையும் கொன்றொழித்து, ஒற்றையாட்சி முறை எனும் பேரழிவுக்குள் நாட்டை தள்ளிவிடும் என்பதால், கூட்டாட்சியியலுக்கு எதிரானதும், நடைமுறைச் சாத்தியமற்றதுமான ‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ திட்டத்தை இந்தியா உறுதியாக எதிர்க்கும். அதிபர் தேர்தல் நடத்துவது போல பொதுத்தேர்தல்களை நடத்தும் உள்நோக்கத்துடன் இத்திட்டத்தை ஒன்றிய பாஜ அரசு திணிக்கிறது. இது நமது அரசியலமைப்பின் ஆன்மாவுக்கு எதிரானதாகும்.

நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்த முன்மொழியப்பட்டுள்ள இந்த சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட்டு, செயல்பாட்டுக்கு வந்தால் நமது அரசியலமைப்பை வடித்து தந்தோர் நம் நாடு அராஜகத்துக்குள்ளும் முற்றதிகாரத்துக்குள்ளும் நழுவி வீழ்ந்துவிடாமல் தடுப்பதற்காக, குறிப்பிட்ட கால இடைவெளியில் தேர்தல்கள் நடத்தப்படுவதன் மூலமாக சட்டரீதியாக அமைத்த அரண்கள் நீக்கப்படும். மாநில சட்டமன்றத் தேர்தல்கள் தங்கள் முக்கியத்துவத்தை இழந்துவிடும். மாநில உணர்வுகளும் பன்முகத்தன்மையும் அழிக்கப்படும்.

இந்திய அரசியலை என்றென்றைக்குமாக மாற்றியமைத்துவிடக் கூடிய முக்கியத்துவம் வாய்ந்த இத்தகைய சட்டத்தை நிறைவேற்றுவதற்கான பெரும்பான்மை பலம் பாஜ கட்சிக்கு இல்லை. ஆனாலும், பழிவாங்கும் எண்ணத்துடனும், நாட்டின் வளர்ச்சியைப் பாதிக்கும் மையமான பிரச்னைகளை எதிர்கொள்வதில் பாஜ கட்சி அடைந்துள்ள தோல்விகளில் இருந்து கவனத்தைத் திசைதிருப்பவும் இத்தகைய அடாவடி முயற்சியை மேற்கொள்கிறது.

தேர்தல் சீர்திருத்தம் என்ற பெயரில் திணிக்கப்படும் இந்த அருவருப்பான நடவடிக்கையை தீவிரமாக எதிர்ப்பதில் ஜனநாயக சக்திகள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். இந்தியாவை, அதன் பன்முகத்தன்மையை, அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

வீடுகளுக்கு மின்சாரம் வழங்குவதில்

இந்தியாவிலேயே மிக குறைந்த கட்டணம் வசூலிக்கப்படுவது தமிழகத்தில்தான்

அரசு விளக்கம்

சென்னை, டிச.17: இந்தியாவிலேயே வீடுகளுக்கு மிகக் குறைந்த மின்சார கட்டணம் தமிழகத்தில்தான் வசூலிக்கப்படுகிறது என்று தமிழக அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை:

கடந்த ஆண்டு மார்ச் மாத கட்டண விகிதங்களின்படி 100 யூனிட் மின்சாரத்திற்கு அனைத்து வரிகள் உட்பட மும்பையில் ₹643, ராஜஸ்தானில் ₹833, மத்திய பிரதேசத்தில் ₹618, உத்தரப் பிரதேசத்தில் ₹693, பீகாரில் ₹689, மராட்டியத்தில் ₹668, தமிழ்நாட்டில் ₹113 மட்டுமே வசூலிக்கப்படுகிறது. வீடுகளுக்கு வழங்கப்படும் மின்சாரக் கட்டணம் இந்திய அளவில் ஒப்பிடும் போது, தமிழ்நாட்டில்தான் மிக மிகக் குறைவாக உள்ளது.

மின்சாரக் கட்டணங்கள் மற்றும் வரி குறித்த சராசரி குறித்து 2023 மார்ச் நிலையில் புள்ளி விவரம் தொகுக்கப்பட்டு அரவிந்த் வாரியரால் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி இந்திய மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் வீடுகளுக்கு வழங்கப்படும் மின்கட்டணங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழ்நாட்டில்தான் வீட்டு உபயோக மின்கட்டணம் வேறு எந்த ஒரு மாநிலத்தையும் விட மிக மிகக் குறைவாக உள்ளது என்ற உண்மை வெளிப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் மின்சாரம் இலவசமாகும். வீடுகளில் 100 யூனிட்டுக்கு மேல் பயன்படுத்தக்கூடிய மின்சாரத்திற்கு சராசரியாக கணக்கிடும்போது கட்டணம் ₹113ஆகும். இந்த சராசரி கட்டணத்தோடு ஒப்பிடும்போது மும்பை 100 யூனிட்டுக்கு ₹643 கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மும்பையில் ஒரு விசித்திரம் என்னவென்றால், அதானி ஒப்பந்தத்தின் மூலம் அளிக்கப்படும் மின்சாரக் கட்டணம் ₹643, டாடா நிருவாகத்தின் மூலம் அளிக்கப்படும் மின்சாரக் ₹524, மும்பை பிரிகான் எலக்ட்ரிசிடி மூலம் அளிக்கப்படும் மின்சாரக் கட்டணம் ₹488.

ராஜஸ்தான் மாநிலத்தில் அளிக்கப்படும் மின்சாரக் கட்டணம் ₹833, மராட்டிய மாநிலத்தில் அளிக்கப்படும் மின்சாரக் கட்டணம் ₹668, உத்தரப் பிரதேசத்தில் அளிக்கப்படும் மின்சாரக் கட்டணம் ₹693, பீகாரில் மாநிலத்தில் அளிக்கப்படும் மின்சாரக் கட்டணம் ₹684, மேற்கு வங்க மாநிலத்தில் அளிக்கப்படும் மின்சாரக் கட்டணம் ₹654, கர்நாடக மாநிலத்தில் அளிக்கப்படும் மின்சாரக் கட்டணம் ₹631, மத்திய பிரதேசத்தில் அளிக்கப்படும் மின்சாரக் கட்டணம் ₹643, ஒடிசா மாநிலத்தில் அளிக்கப்படும் மின்சாரக் கட்டணம் ₹426, சத்தீஸ்கர் மாநிலத்தில் அளிக்கப்படும் மின்சாரக் கட்டணம் ₹431.

இப்படி, இந்திய மாநிலங்கள் ஒவ்வொன்றும் வீடுகளுக்கு வழங்கப்படும் மின்கட்டணத்தை உயர்த்தி வழங்கும்போது தமிழ்நாட்டில்தான் மிக மிகக் குறைவாக ₹113 வசூலிக்கப்படுகிறது. இதனை திமுகவோ, தமிழ்நாடு அரசோ குறிப்பிட்டு சொல்லவில்லை. இந்திய மாநிலங்களில் நிலவும் மின்சார கட்டணங்களை ஒப்பிட்டு ஆய்வு செய்து அரவிந்த்வாரியர் குறிப்பிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாஜ தலைவர் அண்ணாமலையுடன்

நடிகை கஸ்தூரி திடீர் சந்திப்பு

முக்கியமான விஷயம்பற்றி விவாதித்ததாக பேட்டி

சென்னை, டிச.17: தி.நகர் பாஜ தலைமை அலுவலகத்தில் மாநில தலைவர் அண்ணாமலையை, நடிகை கஸ்தூரி நேற்று திடீரென சந்தித்து பேசினார். பின்னர் அவர் அளித்த பேட்டி:

எனக்கு கடந்த நவம்பர் மாதம் நடந்த சர்ச்சையில், கைது பிரச்னையின் போது பாஜ தலைவர் அண்ணாமலை லண்டனில் இருந்தார். அப்போது அவரை நான் தொடர்பு கொண்டு பேசினேன். அவர் எனக்கு நிறைய தைரியம் கொடுத்தார். அட்வைஸ் கொடுத்தார். அவர் சொன்னதில் நான் பாதிதான் பண்ணுனேன். மீதி பண்றதுக்கு உள்ள என்னை உள்ளே போட்டு விட்டார்கள்.

லண்டனில் இருந்து திரும்பி வந்ததும், அண்ணாமலையை வரவேற்கும் விதமாகவும், எனக்கு நடந்த சோதனையான காலக்கட்டத்தில் பக்கபலமாக இருந்ததற்காக நன்றி தெரிவிப்பதற்காகவும் தான் இங்கே வந்தேன். வந்த இடத்தில் இருவரும் முக்கியமான விஷயத்தை நாங்கள் கண்டிப்பாக விவாதித்தோம். அந்த விவாதம் இன்னும் முற்றுப்பெறவில்லை. அதற்கான தொடர்ச்சி, மீட்சி இருக்கிறது. முழுமையாக விவாதித்து முடித்ததற்கு அப்புறம் கண்டிப்பாக உங்களுக்கு தெரிவிப்பேன். எல்லாரும் ஒரு மித்த கூட்டணியாக இருந்து தேர்தலை சந்திக்க வேண்டும். என்னை பொறுத்தவரைக்கும் அது ஒரு நல்ல முன் ஏற்பாடாக இருக்கும். கடந்த ஒரு மாதமாக நான் சந்தித்து கொண்டு இருக்கும் வேறுபாடுகள், என் வாழ்க்கை ஒரு மாதத்தில் மாறி போய் விட்டது. அந்த மாற்றத்தை பற்றி தான் நான் அண்ணாமலையிடம் பேசினேன். கொஞ்சம் அரசியலும் பேசியிருக்கிறோம். மொத்த அரசியலும் பேசியதற்கு அப்புறம் உங்களிடம் தெரிவிப்பேன்.

அமுதா, காகர்லா உஷா, செல்வி அபூர்வா உள்ளிட்ட

5 ஐஏஎஸ் அதிகாரிகள் கூடுதல் தலைமை செயலாளராக பதவி உயர்வு

அரசு உத்தரவு

சென்னை, டிச.17: அமுதா, காகர்லா உஷா, செல்வி அபூர்வா உள்ளிட்ட 5 ஐஏஎஸ் அதிகாரிகள் கூடுதல் தலைமை செயலாளராக பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

தமிழக அரசின் தலைமை செயலாளர் என்.முருகானந்தம் நேற்று வெளியிட்ட உத்தரவில் கூறியிருப்பதாவது: தமிழக அரசின் வருவாய் மற்றும் பேரிடர் துறைச் செயலாளராக பதவி வகித்து வரும் பி.அமுதா, குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் அதுல் ஆனந்த், ஒன்றிய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தில் செயலாளர் சுதீப் ஜெயின், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளர் காகர்லா உஷா, வேளாண்மை உற்பத்தி ஆணையராக செல்வி அபூர்வா ஆகியோர் பதவி வகித்து வருகின்றனர். முதன்மை செயலாளர் அந்தஸ்தில் இருக்கும் இந்த 5 ஐஏஎஸ் அதிகாரிகள், கூடுதல் தலைமை செயலாளர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

கூடுதல் தலைமை செயலாளராக பதவி உயர்வு பெற்றுள்ள பி.அமுதா, அதுல் ஆனந்த், சுதீப் ஜெயின், காகர்லா உஷா, செல்வி அபூர்வா ஆகிய 5 பேரும் 1994ம் ஆண்டு பேட்ஜ் ஐஏஎஸ் அதிகாரிகள் ஆவர்.

RELIANCE Asset Reconstruction

ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்.
பதிவு அலுவலகம்: 11வது தளம், வடக்குப் பகுதி, ஆர்–டெக் பூங்கா. மேற்கு விரைவு நெடுஞ்சாலை, கோரேகான் (கிழக்கு), மும்பை– 400063.

சுவாதீன அறிவிப்பு (காண்க விதி 8(1)) (அசையா சொத்துக்காக)

இவ்வாறிருக்க, ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட் மக்மா ஆர்ஏஆர்சி 031 டிரஸ்ட் ஆனது 24.03.2017 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தத்தின்படி மக்மா ஹவுசிங் ஃபைனான்ஸ் வசமிருந்து நிதிச் சொத்துகளைக் கைப்பற்றியுள்ளது. ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரி பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிமுறை மற்றும் கடனீட்டுச் சொத்து உரிமை [அமலாக்கம்] விதிகள், 2002 இன் விதி 3 உடன் பிரிவு 13(2) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, 02.07.2024 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு வழங்கி, கடன்தாரர்கள் **1. திரு.P.கண்ணன் த/பெ.பெரியசாமி. எண்.35/244, சக்கரேஸ்வரி நகர் சுந்தரசோழபுரம், திருவேற்காடு, சென்னை–600077.... 2. திருமதி.K.மாலதி, க/பெ.P.கண்ணன், எண்.35/244, சக்கரேஸ்வரி நகர் சுந்தரசோழபுரம், திருவேற்காடு. சென்னை–600077. கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 02.07.2024 தேதிப்படி திருப்பி செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை மொத்தமாக ரூ. 35,45,388.42/– (ரூபாய் முப்பத்தைந்து லட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து முந்நூற்று எண்பத்தி எட்டு மற்றும் நாற்பத்தி இரண்டு பைசா மட்டும்)** மற்றும் முழு தொகையையும் திரும்ப செலுத்தும் வரையிலான தேதி வரை எதிர்கால வட்டியுடன் கோரிக்கை அறிவிப்பு வழங்கப்பட்ட தேதியிலிருந்து அறுபது (60) நாட்களுக்குள் செலுத்துமாறு கோரியிருந்தார்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர் / நிலுவைத்தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளனர். கீழே கையொப்பமிட்டவர் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் விதி 8 உடன் சட்டத்தின் பிரிவு 13 (4) கீழ் அவருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இங்கே கீழே விவரிக்கப்பட்ட சொத்தினை **13 டிசம்பர் 2024** அன்று சுவாதீனம் செய்துள்ளார்.

கடன்தாரர்/ அடமானதாரர்கள் அவர்களுக்குக் குறிப்பிட்டும் மேலும் பொதுமக்களுக்குப் பொதுவாகவும் இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது: சொத்துகளுடன் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டாம். மேலும் மேற்கூறிய சொத்துகள் உடனான அனைத்து நடவடிக்கைகளும் **03.12.2024 தேதி முதற்கொண்டு ரூ.38,15,035.44/– (ரூபாய் முப்பத்தெட்டு லட்சத்து பதினைந்தாயிரத்து முப்பத்து ஐந்து மற்றும் நாற்பத்து நான்கு பைசா மட்டும்) தொகையை திருப்பிச் செலுத்தும் வரையிலான எதிர்கால வட்டி மற்றும் செலவுடன் சேர்த்து ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடின்** வசூலுக்கு உட்படும்.

கடனீட்டுச் சொத்தின் விவரம்:

P.கண்ணனுக்குச் சொந்தமான சொத்து
அனைத்து நிலத்தின் அளவு 2400 சதுர அடி, ச.எண்.102/2 வேப்பம்பட்டு கிராமம், மனை எண்.80 "மார்ஸ் நகர், வேப்பம்பட்டு கிராமம், திருவள்ளூர் தாலுகா திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது மற்றும் **எல்லைகள்:– வடக்கில்:** 30 அடி அகல சாலை, **தெற்கில்:** திறந்தவெளி பொழுதுபோக்கிடம், **கிழக்கில்:** மனை எண். 79, **மேற்கில்:** மனை எண். 81.
திருவள்ளூர் சார் பதிவு மாவட்டத்திலும், திருவள்ளூர் பதிவு மாவட்டத்திலும் அமைந்துள்ளது.

இடம்: வேப்பம்பட்டு, திருவள்ளூர் — ஒம்/– அதிகாரப்பூர்வ அலுவலர்
தேதி: 13.12.2024 — ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்

TATA

டாடா கேபிடல் லிமிடெட்
11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013.
கிளை முகவரி: முதல் தளம், சென்டேனியல் ஸ்கெயர், 6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை –600024

அசையாச் சொத்து விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு
(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 8 (6) மற்றும் 9(1) கீழ்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8 (6) மற்றும் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

கடன் கணக்கு எண்.TCFLA0404000011701701: திரு.T V மகேஷ் ராயன்

டாடா கேபிடல் லிமிடெட் (டிசிஎல்) என்பது வங்கியல்லாத நிதிநிறுவனமாகும், நிறுவனங்கள் சட்டம்,1956 இன் விதிகளின் கீழ் இணைக்கப்பட்டது. மேலும் அதன் பதிவு அலுவலகம் 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013 என்ற முகவரியிலும் அதன் கிளை அலுவலகங்களில் ஒன்று **தமிழ்நாட்டிலும் (கிளை)** உள்ளது. டாடா கேபிடல் பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்(டிசிஃபிஎஸ்எல்) நிறுவனம் மற்றும் டாடா கிளீன்டெக் கேபிடல் லிமிடெட் (டிசிசிஎல்) நிறுவனம் ஆகியவற்றிற்கு இடையிலான ஏற்பாடு திட்டத்திற்கு தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் (என்சிஎல்டி), மும்பை முழுமையான அனுமதி வழங்கிய 24.11.2023 தேதியிட்ட ஆணைக்கு இணங்கவும், நிறுவனங்கள் சட்டம் 2013 (கூறப்பட்ட திட்டம்) விதிகளின்படி பிரிவுகள் 230 இலிருந்து 232 வரை மற்றும் பிரிவு 66 மற்றும் பொருந்தக் கூடிய பிற பிரிவுகளின்படியும் இவை மாற்றித் தரக்கூடியவையாகவும் டாடா கேபிடல் லிமிடெட் மாற்றித்தரப்பட்டதற்கு உரியதாகவும் உள்ளது. அதன் அடிப்படையில் டிசிஃபிஎஸ்எல் மற்றும் டிசிசிஎல் (மாற்றித்தரக்கூடிய நிறுவனங்கள்) ஆகியவை டிசிஎல் ஆக மாற்றப்பட்டு அதன் தொடர்பாக அனைத்து சொத்துகள், சொத்துகள், உரிமைகள், பயன்கள், நலன்கள், கடமைகள், பொறுப்புகள், உடமைகள், ஒப்பந்தங்கள், ஒப்பந்தங்கள், பத்திரங்கள் ஏனையவை 01.01.2024 இலிருந்து டிசிஎல்– உடன் இணைக்கப்பட்டுள்ளன. மேற்கூறப்பட்ட உத்தரவு மற்றும் திட்டத்திற்கு இணங்க, அனைத்து டிசிஃபிஎஸ்எல் நிர்வகிக்கப்பட்ட அனைத்து பயன்பாட்டு ஆவணங்களும் மற்றும் அது தொடர்பாக நிலுவையில் உள்ள அனைத்தும் விண்ணப்பதாரர் நிறுவனத்திற்கு மாற்றப்பட்டன, எனவே அதன் அடிப்படையில் கடன்தாரர்கள்/உபகடன்தாரர்களிடமிருந்து டிசிஎல் ஆனது கோருவதற்கு உரியதாகிறது.

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/உப–கடன்தாரர் ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, டாடா கேபிடல் **லிமிடெட் (கடனீட்டு கடனீந்தோர்/டிசிஎல்)** வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் லிமிடெடின் (கடனீட்டு கடனீந்தோர்) அதிகாரப்பூர்வ அதிகாரியால் அடையாளப்பூர்வ சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, **‘உள்ளது உள்ளவிடத்தில்’ & ‘உள்ளது உள்ளவாறு’ மேலும் ‘உள்ளது எதுவோ அது’ அடிப்படையில் 24, ஜனவரி, 2025 தேதியன்று** விற்பனை செய்யப்பட உள்ளது.

அதேசமயம், கடனீட்டுச் சொத்தின் கீழ் பெறப்பட்ட கடனை வசூலிப்பதற்காக கடனீட்டுச் சொத்து விற்பனை செய்யப்படுகிறது. அதாவது, கடன் கணக்கு எண்.TCFLA0404000011701701–க்கு 10.12.2024 தேதிப்படி நிலுவையில் உள்ள ரூ.76,71,272/– (ரூபாய் எழுபத்தாறு லட்சத்து எழுபத்து ஓராயிரத்து இருநூற்று எழுபத்து இரண்டு மட்டும்) தொகையை கடன்தாரர் & உப–கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள், அதாவது, 1) திரு. T.V. மகேஷ் ராயன், த/பெ. வேணுகோபால், F–9/3, ஏஜஸ் ஹவுசிங் காம்ப்ளக்ஸ், மேற்கு நடேசன் நகர், விருகம்பாக்கம், சென்னை, தமிழ்நாடு–600092; (2) திரு. T.V.மகேஷ் ராயன், டிரீம் இன்ஃபோடெக், எண். F–9/3, ஏஜஸ் ஹவுசிங் காம்ப்ளக்ஸ், மேற்கு நடேசன் நகர், விருகம்பாக்கம், சென்னை, தமிழ்நாடு–600092; (3) திருமதி.தேவி மகேஷ் ராயன், க/பெ. T.V. மகேஷ் ராயன், F–9/3, ஏஜஸ் ஹவுசிங் காம்ப்ளக்ஸ், மேற்கு நடேசன் நகர், விருகம்பாக்கம், சென்னை, தமிழ்நாடு– 600092; (4) M/s. டிரீம் இன்ஃபோடெக் அதன் உரிமையாளர் திரு. T.V. மகேஷ் ராயனால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது, எண். F–9/3, ஏஜஸ் ஹவுசிங் காம்ப்ளக்ஸ், மேற்கு நடேசன் நகர், விருகம்பாக்கம், சென்னை, தமிழ்நாடு 600092; (5) M/s. எஸ்டிபிஎல் டெக்னாலஜிஸ், அதன் உரிமையாளர் திருமதி. தேவி மகேஷ் ராயனால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது, F–9/3, ஏஜஸ் ஹவுசிங் காம்ப்ளக்ஸ், பிளாக் F, மேற்கு நடேசன் நகர், விருகம்பாக்கம், சென்னை, தமிழ்நாடு–600092

இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய **24, ஜனவரி 2025 தேதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு மின்–ஏலம் மூலம்** அதன் கிளை அலுவலகமான **முதல் தளம், சென்டேனியல் ஸ்கெயர், 6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை –600024இல்** விற்பனை செய்யப்படும்.

மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத் தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது 23, ஜனவரி, 2025 தேதி அன்று மாலை 5 மணி வரை, டாடா கேபிடல் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் பெற்றுக்கொள்ளப்படும்.

வ. எண்	கடனீட்டுச் சொத்துகளின் விவரம்	சுவாதீனத்தின் வகை ஆக்கப்பூர்வ/ கையக	நிர்ணய விலை (ரூ.)	முன்வைப்புத் தொகை EMD (ரூ.)
1.	சென்னை மாவட்டம், எழும்பூர் தாலுகா, பெரியகூடல் கிராமத்தில் மனை எண் 94, கதவு எண் 98, பாரதிபுரம் 2வது தெரு, ஷெனாய் நகர் மேற்கு, சென்னை, 600030 என்ற எண்ணில் உள்ள சொத்தின் அனைத்து பகுதி மற்றும் துண்டுகள், TS No. 2 (பகுதி), பிளாக் எண் 16 –ல் அடங்கியுள்ளது. அளவு 135 சதுர மீட்டர்கள். அதிலுள்ள கட்டிடம் மற்றும் வசதிகள் மற்றும் அனைத்து மேம்பாடுகள் மற்றும் நிலம், எல்லைகள்:– வடக்கு: 2–வது தெரு; தெற்கு: மனை எண்கள் 101 & 102; கிழக்கு: சந்து மற்றும் மேற்கு: மனை எண் 95. கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில் 9.4 மீட்டர்; கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கத்தில் 9.6 மீட்டர், வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கத்தில் 14.2 மீட்டர் மற்றும் வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கத்தில் 14.2 மீட்டர். அண்ணா நகர் சார் பதிவு மாவட்டம் மற்றும் மத்திய சென்னை பதிவு மாவட்டத்துக்குள் அமைந்துள்ளது.	ஆக்கப்பூர்வ	ரூ.1,68,43,000 (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தெட்டு லட்சத்து நாற்பத்து மூன்றாயிரம் மட்டும்)	ரூ.16,84,300 (ரூபாய் பதினாறு லட்சத்து எண்பத்து நான்காயிரத்து முந்நூறு மட்டும்)

விற்பனைக்கான சொத்தின் விவரங்கள் அட்டவணையில் உள்ளன. மேலே விவரிக்கப்பட்டுள்ளபடி அடமானசொத்துக்குள் அசையும் பொருட்கள்/வீட்டில் உள்ளவை ஏதேனும் இருந்தால், விற்பனை அறிவிப்பில் குறிப்பாக விவரிக்கப்படும் வரை, கடனீட்டுச் சொத்துடன் விற்பனைக்கு உரியதாகாது. மேற்கூறிய நிலுவைத் தொகை, வட்டி மற்றும் செலவுகள்(விற்பனைக்கான செலவு உட்பட) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் வழங்கப்படாலோ, அல்லது மேற்கூறிய கடனீட்டுச் சொத்திற்கான நிலுவைத் தொகை, வட்டி மற்றும் செலவுகள் திருப்பிச் செலுத்தப்பட்டதற்கான சான்றுகளை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் திருப்திக்கு உகந்த வகையில் தந்தாலோ விற்பனை நிறுத்தப்படும்.

இதன்மூலம் பொதுமக்கள் தங்கள் டெண்டரை தனிப்பட்ட முறையில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். எந்த அதிகாரியோ அல்லது விற்பனை நடவடிக்கையில் தொடர்புடைய எந்த பிற நபரோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏலத்தில் பங்கெடுக்கவோ, அல்லது சொத்தின் விற்பனையில் எந்த பயனையும் அடைய முயற்சிக்கவோ கூடாது. சர்ஃபாசி சட்டம் 2002 இன் விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் விற்பனை நடைபெறும். மின் ஏலமானது இணைய முகப்பான https://bankauctions.in இன் மூலமாக 24 ஜனவரி, 2025 தேதியில் பிற்பகல் 2.00 முதல் 3.00 மணி வரை ஒவ்வொன்றும் 10 நிமிட கால வரையறைக்குள் நடைபெறும். சொத்தைக் கொள்முதல் செய்வதற்காக முன்வைப்புத் தொகையை டாடா கேபிடல் லிமிடெட் என்ற பெயரில் சென்னையில் செலுத்த தக்கதான கேட்பு வரைவோலையை சமர்ப்பிக்க வேண்டும். சொத்தைப் பார்வையிடுதல் 15, ஜனவரி 2025 தேதியன்று காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

குறிப்பு: ஆர்வமுள்ள ஏலதாரர்கள் டாடா கேபிடல் லிமிடெட் மொபைல் எண்.+918691005238/அதிகாரப்பூர்வ அதிகாரி திரு. ராகேஷ் டாவ்னி கோக்காட்டு அவர்களை மின்னஞ்சல் முகவரி rakesh.kokkattu@tatacapital.com இல் அல்லது செல்பேசி எண். 91–6282658079 இல் தொடர்பு கொள்ளலாம்.

விற்பனைக்கான நிபந்தனைகள் மற்றும் வரையறைகளை, கடனீட்டு கடனீந்தோரின் இணையதளமான https://bit.ly/3ZEgotT இன் இணைப்பில் சென்று தெரிந்து கொள்ளலாம்.

இடம்: சென்னை, தமிழ்நாடு, தேதி: 17.12.2024 — ஒம்/–அதிகாரப்பூர்வ அலுவலர், டாடா கேபிடல் லிமிடெட்

அரசு அலுவலகங்களில் தவறு செய்யும்

அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

தமிழக அரசுக்கு ஐகோர்ட் உத்தரவு

சென்னை, டிச. 17: புதுச்சேரியை சேர்ந்த கோகிலா சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், புழல் சிறையில் தண்டனை கைதியாக உள்ள தனது கணவர் சிறையில் பார்த்த வேலைக்காக அவருக்கு வழங்கப்படும் ஊதியம் நான்கு மாதங்களாக வழங்கப்படவில்லை என கூறியுள்ளார்.

வழக்கு விசாரணையின் போது ஆஜரான மனுதாரர் தரப்பு வழக்கறிஞர், தமிழக சிறைகளில் கைதிகள் தயாரித்த பொருட்களை விற்பனை செய்ததில் 14 கோடி ரூபாய் அளவுக்கு முறைகேடு நடந்துள்ளதாக மத்திய தணிக்கை துறை கூறியது தொடர்பாக செய்தி தாள்களில் வெளியான செய்தியை தாக்கல் செய்தார்.

இதனையடுத்து, இந்த விவகாரம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய லஞ்ச ஒழிப்புத்துறைக்கு உத்தரவிட்டிருந்தார்.

இந்த வழக்கு மீண்டும் நீதிபதிகள் எஸ்.எம். சுப்ரமணியம், எம்.ஜோதிராமன் அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, ஆஜரான கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ஆர். முனியப்பராஜ் ஆஜராகி அறிக்கையை தாக்கல் செய்தார்.

இதை பார்த்த நீதிபதிகள், முறைகேடு தொடர்பாக 2022 செப்டம்பர் மத்திய தணிக்கைக்குழுவின் அறிக்கை வெளியான நிலையில் கடந்த 13ம் தேதி தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கிறது? இவ்வளவு நாட்கள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?. தமிழகம் முழுவதும் அரசு அலுவலகங்களில் நடைபெறும் ஊழல் முறைகேடு தொடர்பாக அரசின் நிலைப்பாடு என்ன? இது போன்ற புகார்களை அரசு தீவிரமாக எடுத்துக்கொள்கிறதா?.

தவறிழைத்த அதிகாரிகள் அனைத்து பலன்களையும் பெற்றுக்கொண்டு ஓய்வுபெற அனுமதிக்கக்கூடாது. இதுபோன்ற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினர்.

இதனையடுத்து, இந்த விவகாரம் தொடர்பாக விரிவான அறிக்கை தாக்கல் செய்ய உள்துறை செயலாளருக்கு உத்தரவிட்ட நீதிபதிகள் விசாரணையை ஜனவரி 6ம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

₹1,500 கோடியில் காலணி...
முதல் பக்க தொடர்ச்சி

நிறுவனத்திற்கு, ராணிப்பேட்டை மாவட்டம் சிப்காட் பனப்பாக்கம் தொழில் பூங்காவில் 200 ஏக்கர் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசுடன் மேற்கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் அடிப்படையில், இந்நிறுவனம் தற்போது ₹1,500 கோடி முதலீட்டில், 25,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் காலணிகள் உற்பத்தி தொழிற்சாலை அமைக்கவுள்ளது.

இத்திட்டத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமை செயலகத்தில் காணொலிக் காட்சி மூலம் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமை செயலாளர் முருகானந்தம், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக துறை செயலாளர் அருண்ராய், தோல் ஏற்றுமதி கவுன்சில் செயல் இயக்குநர் செல்வம், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் விஷ்ணு, தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு கழகத்தின் (சிப்காட்) மேலாண்மை இயக்குநர் செந்தில்ராஜ், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் மருத்துவர் அலர்மேல்மங்கை, ஹோங்பு நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிறுவனர் டி.ஒய். சாங், இயக்குநர் ஜாக்கி சாங், ஜேவி பங்குதாரர் மற்றும் இயக்குநர் அகீல் பனாருனா, நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

RELIANCE Asset Reconstruction

ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்.
கார்ப்பரேட் அலுவலகம்: 11வது தளம், வடக்குப் பகுதி, ஆர்–டெக் பூங்கா. மேற்கு விரைவு நெடுஞ்சாலை, கோரேகான் (கிழக்கு), மும்பை– 400063.

கடனீட்டு சொத்துக்களின் மின்–ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட் (ஆர்ஏஆர்சி) "எஸ்பிஐ வங்கி ஆர்ஏஆர்சி 035 டிரஸ்ட்", ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா உடன் செயல்படுத்தப்பட்ட 31.03.2017 தேதியிட்ட ஒப்படைப்பு ஒப்பந்தத்தின் மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்களுக்கு ஒதுக்கப்பட்டவர் மற்றும் கடனீட்டு கடன்தாரர் நிதிச் சொத்துகளைப் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 ஆகியவற்றின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி கீழே கையொப்பமிடப்பட்டவர்கள், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துகள் விற்பனை செய்யப்படும் என்று பொதுவாக பொதுமக்களுக்கு அறிவிக்கிறது. நிலுவைத் தொகையை வசூலிக்க "ஆன்லைன் மின்–ஏலம்". சொத்துகள் கண்டிப்பாக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள மற்ற விதிமுறைகளைத் தவிர்த்து, **"எங்கே இருக்கிறதோ, அப்படியே", "உள்ளபடியே" மற்றும் "எந்த உத்தரவாதமும் இல்லை"** என்ற அடிப்படையில் விற்கப்படும்.

கடன்தாரர்/ஜாமீன்தாரர் பெயர்

1.M/S. நியூ பாரடிகம், அதன் பங்குதாரரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது, ஸ்ரீ.A.ரகுநாத் எண்.17, II–வது தளம், அலீஸ் முல்க், 1வது தெரு, ஆயிரம் விளக்கு, சென்னை–600006.
2.திரு. A ரகுநாத், த/பெ. திரு. அழகர்சாமி எண். 17 இரண்டாவது தளம், அலீஸ் முல்க், 1வது தெரு, ஆயிரம் விளக்கு, சென்னை–600006.
3.திரு. R ரவிக்குமார், த/பெ. (லேட்) ராம்சாமி நாடார் 48. P M தர்கா மெயின் தெரு, டாக்டர் நடேசன் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை–600005.
4. திருமதி. சண்முககனி அம்மாள் (ஜாமீன்தாரர்) 48, P M தர்கா மெயின் தெரு, டாக்டர் நடேசன் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை–600005.

12.12.2024 தேதிப்படி நிலுவைத் தொகை: ரூ.23,72,69,665.25/– (ரூபாய் இருபத்தி மூன்று கோடியே எழுபத்திரண்டு லட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து அறுநூற்று அறுபத்தைந்து மற்றும் இருபத்தைந்து பைசா மட்டும்)

சுவாதீன நாள் – 21.09.2013

சொத்து விளக்கம்	நிர்ணய விலை	EMD தொகை
நிலம் மற்றும் கட்டிடத்தின் அனைத்து பகுதி மற்றும் துண்டுகள், பழைய கதவு எண் 3A, புதிய எண்.48, பப்பு மஸ்தான் தர்கா, மெயின் தெரு, டாக்டர் நடேசன் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை 600005 , பழைய ஆர்.எஸ்.எண்கள். 1055, 1055/2A, 1055/2B, தற்போதைய ஆர்.எஸ்.எண். 1055/5, பிளாக் எண்.22, மைலாப்பூர் டிவிஷன் அளவீடு 1 கிரவுண்ட் மற்றும் 883 ச.அடி. **எல்லைகள்:–வடக்கே:** அப்துல் ரஹ்மானின் வீட்டு சொத்து; **தெற்கே:** அமீன் பாஷாவின் சொத்து, **கிழக்கு:** பப்பு மஸ்தான் தர்கா மெயின் தெரு, **மேற்கு:** பப்பு மஸ்தான் தர்கா நிலங்கள்	ரூ.1,60,14,000/– (ரூபாய் ஒரு கோடியே அறுபது லட்சத்து பதினான்காயிரம் மட்டும்)	ரூ.16,01,400/– (ரூபாய் பதினாறு லட்சத்து ஆயிரத்து நானூறு மட்டும்)

ஏல நிகழ்வுகளின் விவரங்கள்: –
சொத்து பார்வையிடுதல் : 03.01.2025 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை
ஏலம் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி: 06.01.2025
மின்–ஏல தேதி: 07.01.2025 பிற்பகல் 2:00 மணி முதல் 3:00 மணி வரை (ஒவ்வொன்றும் 5 நிமிடங்கள் நீட்டிப்புடன்)

வழக்கு விவரங்கள்: வழக்கு இல்லை

மின்–ஏல விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

1. ரிலையன்ஸ் அசெட் புனரமைப்பு நிறுவனத்தின் உறுதிப்பாட்டிற்கு உட்பட்டு, சொத்து இருப்பு விலைக்குக் கீழே விற்கப்படக்கூடாது. லிமிடெட் (RARC) பாதுகாப்பான கடனாளராக. சொத்துக்கள் கண்டிப்பாக **"எங்கே உள்ளது", "உள்ளது போல்" மற்றும் "எந்த உதவியும் இல்லை"** ஆகியவற்றில் கண்டிப்பாக விற்கப்படும்.
2. RARC இன் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநரான M/s ARCA EMART PRIVATE LIMITED மற்றும் E–ஏல டெண்டர் ஆவணங்கள் மூலம் மின்–ஏலம் நடைபெறும். ஆன்லைன் மின்–ஏல விற்பனைக்கான பொது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் ஆன்லைன் மின்–ஏல ஏலப் படிவத்தை உள்ளடக்கிய இணையதளங்கள்: **www.rarcl.com மற்றும்** ஏலதாரர்கள் தொடர்புடைய ஆவணங்களை பதிவிறக்கம் செய்யலாம்.
3. பங்கேற்பு ஐடி மற்றும் கடவுச் சொல்லை இ–ஏல நிறுவனம் மூலம் தெரிவிக்கப்படுவதால், ஏலதாரர்கள் சரியான மின்னஞ்சல் ஐடியை வைத்திருக்க வேண்டும். அவர்களின் மின்னஞ்சல் ஐடி மட்டுமே.
4. ஏலத்தில் ஈடுபட விரும்பும் ஏலதாரர்கள், சுய–சான்றளிக்கப்பட்ட KYC ஆவணங்களுடன் (PAN, EMD பணம் செலுத்தும் விவரங்களுடன் பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் தங்கள் BID ஐ சமர்ப்பிக்க வேண்டும். ஆதார் அட்டை போன்றவை) மற்றும் **ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்டின் (RARC) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும், 6வது தளம், கிவ்ராஜ் வளாகம் II, எண்.477–482, அண்ணாசாலை, நந்தனம், சென்னை – 600035** அல்லது **மின்னஞ்சல் மூலம்** satheesh.p.kumar@relianceada.com **பங்கேற்பு ஐடி மற்றும் கடவுச்சொல் அவர்களின் மின்னஞ்சலில் மட்டுமே தெரிவிக்கப்படும். ஏலப் படிவத்தைச் சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி 06.01.2025.** எக்காரணம் கொண்டும் தாமதமாகப் பெறப்பட்ட ஏலப் படிவம் அல்லது EMD ஏற்றுக்கொள்ளப்படாது.
5. ஏலதாரர் இந்திய திவால் சட்டம், 2016 இன் பிரிவு 29A இன் கீழ் உறுதிமொழி கொடுக்க வேண்டும்.
6. நெட்வொர்க் சீர்குலைவுகள் காரணமாக ஏலதாரர் தரப்பில் ஏதேனும் குறைபாடுகள்/தோல்விகளுக்கு RARC அல்லது சேவை வழங்குநர் பொறுப்பாக மாட்டார்கள். இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்க, ஏலதாரர்கள் மாற்று மின்சார காப்புப் பிரதிகள் போன்ற தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள்.
7. **Earnest Money Deposit (EMD) RTGS/NEFT நிதிபரிமாற்றம் செய்ய வேண்டிய நடப்பு கணக்கு எண்.36718693732 வங்கியின் பெயர்: ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, கிளை: (மும்பை), பயனாளியின் பெயர்: SBI BANK RARC 035 டிரஸ்ட், IFSC குறியீடு:SBIN0000300.** காசோலைகள்/ தேவை வரைவு EMDக்காக ஏற்றுக்கொள்ளப்படாதுஎன்பதை நினைவில்கொள்ளவும்.
8. இருப்பு விலை மற்றும்/அல்லது EMD தொகை இல்லாத ஏலங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது. ஏலதாரர்கள் தங்களின் மேலும் ஏலத் தொகையை ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) பல மடங்குகளில் மேம்படுத்தலாம். ஒரே ஏலதாரர் என்றால், ஏலதாரர் தனது ஏலத்தை குறைந்தபட்சம் ஒரு அதிகரிப்பு கட்டாயமாக உயர்த்த வேண்டும்.
9. வெற்றிகரமான ஏலதாரர் ஏலத் தொகையில் 25%/விற்பனை விலையில் (ஏற்கனவே செலுத்தப்பட்ட பணமும் சேர்த்து) வெற்றிகரமான ஏலதாரர் அறிவிக்கப்பட்ட உடனேயே செலுத்த வேண்டும். வெற்றிகரமான ஏலதாரர், வெற்றிகரமான ஏலதாரர் அறிவிக்கப்பட்டதிலிருந்து 15 நாட்களுக்குள் ஏலத் தொகை/விற்பனை விலையில் மீதமுள்ள 75% டெபாசிட் செய்ய வேண்டும்.
10. வெற்றிகரமான ஏலதாரர் மேலே குறிப்பிட்டபடி விற்பனை விலையை டெபாசிட் செய்யத் தவறினால், EMD உட்பட அனைத்து டெபாசிட்டுகளும் எந்த முன்னறிவிப்பும் இல்லாமல் பறிமுதல் செய்யப்பட்டதாகக் கருதப்படும். எவ்வாறாயினும், மீதமுள்ள 75% செலுத்துவதற்கான நியாயமான கால அவகாசத்தை நீட்டிப்பது அனுமதிக்கப்படலாம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரின் தனிப்பட்ட விருப்பத்திற்கு உட்பட்டது.
11. வெற்றிபெறாத ஏலதாரர்களின் EMD தொகையானது மின்–ஏல விற்பனை நடவடிக்கைகள் முடிவடைந்த பிறகு, வட்டி இல்லாமல் திருப்பித் தரப்படும்.
12. அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் கொடுக்கப்பட்ட விவரங்கள் அவருடைய அறிவு, நம்பிக்கை மற்றும் பதிவுகளின் வரையில் கூறப்பட்டுள்ளன. எந்தவொரு பிழை, தவறான அறிக்கை அல்லது புறக்கணிப்பு போன்றவற்றுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பொறுப்பேற்க மாட்டார்.
13. கீழ் கையொப்பமிடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, எந்தவொரு முன் அறிவிப்பின்றி அல்லது ஏதேனும் காரணங்களை முன்வைக்காமல், எந்தவொரு ஏலத்தையும் ஏற்க அல்லது நிராகரிக்க அல்லது விற்பனையை ஒத்திவைக்க / ஒத்திவைக்க / ரத்து செய்ய அல்லது விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றுவதற்கான முழு உரிமையும் உள்ளது.
14. ஏலதாரர்கள் சொத்தின் மீதான கட்டணங்கள்/சுமைகள் குறித்து விவேகமான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் மேலும் தங்கள் ஏலத்தைச் சமர்ப்பிக்கும் முன் சொத்தின் தலைப்பு, அளவு, தரம் குறித்து தங்களைத் திருப்திப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆன்லைன் ஏலத்தை சமர்ப்பித்த பிறகு, கட்டணங்கள், சொத்து மீதான சுமைகள் மற்றும் வேறு எந்த விஷயத்திலும் எந்தவிதமான உரிமைகோரல்களும் ஏற்றுக்கொள்ளப்படாது.
15. நிலுவைத் தொகைகள், நிலுவைத் தொகைகள், வரிகள், சட்டப்பூர்வ அல்லது சொத்து விற்பனைக்கான முத்திரைத் கட்டணம்/பதிவுக் கட்டணம் உள்ளிட்ட கட்டணங்களை வாங்குபவரால் மட்டுமே ஏற்கப்படும்.
16. மேலும் விவரங்களுக்கு, **திரு. சதீஷ் குமார் பி, அசோசியேட் வைஸ் பிரசிடென்ட் லீகல் – ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்டின் மொபைல் எண். 8939677550**ஐ மேலே குறிப்பிட்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.
17. விற்பனை சான்றிதழ் முழு விற்பனை பரிசீலனை மற்றும் பாதுகாக்கப்பட்ட கடனாளி மூலம் விற்பனை உறுதி செய்யப்பட்ட பிறகு வழங்கப்படும். வெற்றிகரமான ஏலதாரரின் பெயரில் விற்பனைச் சான்றிதழ் வழங்கப்படும். விற்பனைச் சான்றிதழில் ஏலத்தைச் சமர்ப்பித்த/இ–ஏலத்தில் பங்கேற்ற நபரைத் தவிர வேறு எந்த கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்படாது.

இந்த அறிவிப்பு, கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர் ஆகியோருக்கு சட்டப்பூர்வ 30 நாட்கள் அறிவிப்பாகவும் இருக்கும். சர்ஃபேசி சட்டம் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள்.

இடம்: சென்னை — அதிகாரப்பூர்வ அதிகாரி
நாள்: 13.12.2024 — ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்